
# வெள்ளி

1 - 9 - 72



சதம் 30



''வாருங்கள்! தமிழர் கூட்டணியின் பிரதிநிதிகளே, வாருங்கள். இந்த நாட்டின் தமிழ் மக்களின் சார்பில் வந்திருக்கும் உங்களைச் சந்திப்பதில் நான் பெருமகிழ்வு கொள்கிறேன்'.



''உங்கள் பிரச்சினைகளை என்னிடம் சொல்லுங்கள். அவற்றிலுள்ள சாதகபாதகங்களை மனம் விட்டுப் பேசுவோம். எப்படியும் ஒரு நல்ல முடிவுக்கு வருவோம். நமது நாட்டின் பொருளாதாரத்துறை படு மோசமான நிலையிலிருக்கிறது. இந்தச் சமயத்தில் இன மொழிப் பிரச்சினைகள் எம்மிடையே எழாதவாறு தடுக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவருடைய முக்கிய கடமையாகும். நாட்டு மக்களிடையே ஒற்றுமை ஏற்பட்டால்தான் எமது பொருளாதாரப் பிரச்சினைகளோடு நாங்கள் தீவிரமாகப் போராட முடியும்,... அதை நான் மிக நன்றாக உணர்கிறேன். உங்கள் வருகை ஒரு நல்ல சுப சகுனமாக அமையட்டும்...''

— இப்படி இலங்கைப் பிரதமர் மனதாரச் சொல்லி, தமிழர் பிரதிநிதிகளுக்கு ஒரு அழைப்பு விடுவாரானால்....

ஓ, இந்த நாட்டின் சரித்திரமே திரும்பி விடாதா!

ஆனால் இப்படிச் செய்வதற்கு, மிகுந்த மதிநுட்பமும், துணிவும் பெருந்தன்மையும் உயர்ந்த பண்பும் பிரதமருக்கு இருக்கவேண்டும்.

— இவற்றில் எதுதான் இல்லை நமது பிரதமருக்கு?

★ 'தோழர் வ. பொ. வுடன் பேசுங்கள்!' என்று சென்ற இதழில் கேட்டிருந்தேன், —அடேயப்பா, தோழருடன் பேசுவதற்கு இளைஞர்கள் எவ்வளவு ஆர்வமாக இருக்கிறார்கள். ஒரே ஒரு வாரத்துக்குள் நூற்றுக்கணக்கான அஞ்சல்கள்! —அவற்றுள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து 'வ. பொ.'வுக்கு அனுப்பியிருக்கிறோம். அடுத்த இதழில் அவர் பேசுவார்!

★ 'வெள்ளி'க்கு ஒரு உதவியாளர் தேவை என்று விளம்பரம் செய்திருந்தேன். சிறந்த தகுதியுள்ள பலர் மிகுந்த ஆர்வத்துடன் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களில் சுமார் பத்துப் பதினைந்துபேர் உண்மையிலேயே நல்ல தகுதி வாய்ந்தவர்களென்பது எனக்குத் தெரியும். ஆனால் இப்போது ஒரே ஒருவரை மட்டும்தானே எடுத்துக்கொள்ள முடியும்? —ஒருவரைத் தெரிவுசெய்து கொண்டுவிட்டேன். விண்ணப்பித்த அன்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

— தி. ச. வரதராசன்.

# கேள்வி பதில்

"சாமிஜி"

ராஜன் சிவா, யாழ்நகர்.

✶ அருளம்பலத்தையும் தியாக ராசாவையும் காணவில்லையே, அவர்கள் அஞ்ஞாத வாசம் செய்கிறார்களா?

சொந்த நலன்களில் குறிவைக்கத் தொடங்கிவிட்ட அரசியல்வாதிகள் பொதுவாழ்வில் அஞ்ஞாதவாசம் செய்வதை விட வேறு வழியில்லை.

சக்திதாசன், அக்கரைப்பற்று.

✶ 'மதுரகவி' நாகராஜன் கவிதைகளுக்கும், 'மகாகவி' ருத்திரமூர்த்தியின் கவிதைகளுக்குமிடையில் என்ன ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டீர்?

ஒற்றுமை: 'மதுரகவி' என்பதும் 'மகாகவி' என்பதும் 'ம' வில் தொடங்கி, 'வி'யில் முடிகிறது. வேற்றுமை: அது மிகப் பெரிது!



'பேனுப் போனு' நெடுங்கேணி.

✶ ஜி. ஜி. யின் மௌனம் எதைக் காட்டுகிறது?

அவருடைய திறமையைக் காட்டுகிறது. —இந்த நேரத்தில் அவர் மௌனமாயிருப்பதும் தமிழ் மக்களின் பாக்கியம்தான்!

என். எம். தாஸ், திருமலை

✶ வாழ்க்கைச் செலவு உயர்ந்திருக்கும் இவ்வேளையில், உண்மை ஊழியர்களுக்கு எவ்வித சலுகையும் வழங்காமல் மந்திரிமார்களுக்கு ரூபா 50/- அலவன்ஸ் கொடுக்கிறார்களே!

'நீங்களும் ஒரு மந்திரியாகுங்கள். ரூபா 50 அலவன்ஸ் கிடைக்கும்!' என்று இளைஞர்களைத் தூண்டிவிடும் நல்ல நோக்கத்தோடு அரசாங்கம் செய்திருக்கலாம்!


**மு. கமலநாதன், செம்மலை,**

★ எம். ஜி. ஆரின் விலாசத்தை அறியத் தருவீர்களா?

எம். ஜி. ஆருக்கு விலாசமா? அவருடைய விலாசம்தான் தமிழ் பேசுமிடமெல்லாம் பரந்து விரிந்து கிடக்கிறதே! 'எம். ஜி. ஆர். தமிழ் நாடு, இந்தியா' என்று எழுதினால் போதுமே!

**செல்வி, ஏழாலை.**

★ தமிழர் கூட்டணித் தலைவர்களுள் எக்காரியத்தையும் சுறுசுறுப்புடன் ஆற்றும் திறனுள்ளவர் யார்?



அவர்களில் ஒருவர் பண்டிதர் இரத்தினம்! -'சுறுசுறுப்பானவர்' என்று சொல்வதை விட 'எடுத்துக்கொண்ட செயலைச் சரியாகத் திட்டமிட்டுக்கொண்டு நடாத்தும் சாணக்கியர்' என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும்!

**சா. சக்திதாசன்,**
**அக்கரைப்பற்று—7.**

★ தினபதி, சிந்தாமணி பத்திரிகைகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

ஒரு செழிப்பான ஆறு திசை மாறி ஓடிக்கொண்டிருக்கிறது!

**ஜெயா, திருகோணமலை.**

★ பெரியாருடைய படிப்புப் பட்டம் பற்றியும், காமராஜருடைய படிப்புப் பட்டம் பற்றியும் கேட்டிருந்தேனே, ஏன் பதில் இல்லை?

கோடிக் கணக்கான மக்களுக்குப் பாடம் சொல்லவும், பட்டம் கொடுக்கவும் தகுதி பெற்ற இந்த இரண்டு பேரின் பட்டங்களையும் படிப்புகளையும் யார் கவனிக்கப் போகிறார்கள்!

**"வளவன்", மட்டுவில் தெற்கு.**

★ உடுவில் எம். பி. தமது காரில் 'ஸ்ரீ' போட்டிருக்கிறார். ஸ்ரீ என்பது தமிழ் எழுத்தா? 'சிறீ' என்று எழுதினால் என்ன?

'ஸ்ரீ' என்பது தமிழ் எழுத்துக்களோடு பல காலமாகப் பழகி விட்ட எழுத்து. 'Sir' என்பதை 'சேர்' என்று எழுதினால் மட்டும் அது தமிழாகி விடுமா? அன்றியும் உடுவில் எம். பி. யின் செயலைப் பொறுத்த மட்டில் 'ஸ்ரீ' தமிழாகவே எழுந்திருக்கிறது!

**செல்வி க. லோகநாயகி,**
**அக்கரைப்பற்று—8.**
**(பரிசுக் கேள்வி)**

★ "நாட்டை முன்னேற்றி விட்ட பிறகு, எனக்குத் தேர்தலில் தோல்வி ஏற்பட்டாலும் நான் கவலைப்படப் போவதில்லை" என்று பிரதமர் கூறியிருக்கிறாரே?

மிக அருமையாகக் கூறியிருக்கிறாரே! இந்த நாடு முன்னேறும் என்ற நம்பிக்கை பிரதமரின் மகனுக்கும் இப்போது இல்லையாம்!

ஆனந்தன், முருங்கன்.

★ மாடுகளுக்குக்கூட தமிழில் குறி சுடாமல் ஆங்கிலத்தில் குறிசுட்டுப் பெருமைப்பட்ட தமிழர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

ஆங்கில மொழி தெரியாமல், தமிழில் கடிதத்தை எழுதி விட்டு, ஆங்கிலத்தில் தங்கள் சொந்தக் கையெழுத்தையே போட்டுவிட்டுப் பெருமைப்படும் தமிழாசிரியர்கள் எத்தனையோ பேர் இன்னும் இருக்கிறார்களே! - இப்போது இத்தகையவர்களைப் பற்றித்தான் நாங்கள் ஏதும் நினைத்துப் பார்க்கவேண்டும்!

சி. குருநாதன், அடம்பன்.

★ அரசாங்கத்தைக் காக்கா பிடிப்பதற்காக, மாற்றுக் கட்சிகளை அவமதிக்கும் துணுக்குகளை 'வெள்ளி'யில் வெளியிடுகிறீர்களா?

அரசாங்கத்தை காக்கா பிடிக்க நினைத்திருந்தால் 'வெள்ளி'க்கு இதற்குள் வெள்ளிதிசை அடித்திருக்குமே! 'வெள்ளி' யாரையும் காக்கா பிடிப்பதுமில்லை; யாருடனும் குரோதம் பாராட்டுவதுமில்லை.

வே. சிதம்பரம், இரத்தினபுரி.

★ இப்போது இலங்கையில் பல்வேறு மாற்றங்களைச் செய்துகொண்டு வருகிறார்களே, இவை நாட்டின் நலனுக்காகவா, அல்லது அரசியல் கோளாறினாலா?

அரசியல் கோளாறு இல்லாமல் இப்போது அணுவும் அசைவதில்லை!

உருத்திரா குமாரசாமி,
பத்தரமுல்லை.

★ 'சட்டம் ஒரு கழுதை' என்று நான் என்னுடைய நண்பனுடன் வாதாடுகிறேன்.

கழுதைக்குப் பேசத் தெரிந்தால் உங்களுடன் சண்டைக்கு வந்து விடக் கூடும்!

★ தம்பி தயாநிதி,
பெல்மதுளை.

நளினியின் நாயகனான மிஸ்டர் வேலாயுதம் யாழ்ப்பாணத்திலிருந்து எப்போது திரும்பி வருவார்?

நல்ல கேள்வி கேட்டீர்கள், நீங்கள் கேட்ட முகூர்த்தமோ என்னவோ, வேலாயுதத்துக்கு யாழ்ப்பாணத்தில் 'என்னவோ' நடந்திருக்கிறதே!

யாழ் ராஜன், மஸ்கெலியா.


★ எமது அண்டை நாடான இந்தியாவின் சுதந்திரவெள்ளிவிழா பற்றி, அன்று வெளி வந்த 'வெள்ளி'யில் ஒரு வரிகூட வரவில்லையே?

'வெள்ளி'யில் இந்திய விஷயங்கள் அளவுக்குச் சற்று அதிகமாகவே வருவதாகவும் ஒரு குறை இருக்கிறதே!

நா. சிவேந்திரன், தெஹிவளை.

★ தியாகம் என்பதன் வரைவிலக்கணம் என்ன?

ஏதோ ஒரு பெரிய லாபத்தை அடைவதற்காகக் கொடுக்கப்படும் சிறு 'பலி'தான் தியாகம் என்பது. அந்த 'லாபம்' பொருளோ பதவியாகவோ இல்லாமல், வெறும் மனத் திருப்தியாகவும் இருக்கலாம்!



ஐம்பது வயதைத் தாண்டியவர்கள் பெரும்பாலும் பழமையைப் போற்றுவதும் புதுமையைக் கண்டிப்பதுமே வழக்கம். இந்தியப் பிரதமர் இந்திராவுக்கு வயது ஆகியபோதிலும் உள்ளத்தால் அவர் புதுமைப் பெண்ணாகவே காணப்படுகிறார். சமீபத்தில் நடைபெற்ற இந்திய சுதந்திர வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் பேசிய அவர், 'பழைய முறைகளை மாற்றவேண்டும்; வறுமையை ஒழிக்கவேண்டும்; சாதிக் கட்டுப்பாடுகள், வீண் சம்பிரதாயங்களை அழிக்கவேண்டும்' என்று பேசியிருக்கிறார்.

'இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள தமிழ் ஆசிரியர்களே கல்வி போதிப்பதில் மிகச் சிறந்தவர்கள்' என்று கல்வியமைச்சினால் நியமிக்கப்பட்ட திடீர்ப் பரிசோதனைக் குழு தெரிவித்திருக்கிறது. ஆனால் இந்த ஆசிரியர்களும் கூட 'திருப்திகரமற்ற' நிர்வாகம் காரணமாக தமது கடமைகளைச் சரிவரச்செய்யாமல், செய்ய முடியாமல் இருக்கிறார்கள்!

ராணித் தியேட்டரில் முதலாவது காட்சி, இடைவேளை. மதுரகவி நாகராஜன் எங்கோ இருந்தவர் என்னைக் கண்டுவிட்டு எழுந்து பக்கத்தில் வந்து, 'என்னுடைய பிறதரை உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார். நான் நினைவுபடுத்து முன்னரே அவர் 'மட்டக்களப்பு இ. போ. ச. வில் வேலையாயிருந்தவர், திடீரென்று நடந்த ஒரு விபத்தினால் அதே இடத்தில் 'போய்'விட்டார். -இன்றைக்குப் பத்துநாள்தானாகிறது!' என்றார். என்னையறியாமலே 'ச்சோ' என்று அனுதாபக் குரல் காட்டிக் கொண்டு நாகராசனுடைய முகத்தைப் பார்த்தேன். அவருடைய இதயத்தில் பதிந்துபோயிருந்த சோகத்தை முகத்திலே எழுதிக்கொண்டிருந்தார். இது நடந்து பத்துநாட்களாகவில்லை. கடந்த **16-8-72** காலையில் ஈழநாடு 'மதுரகவி நாகராசன் மறைந்தார்!' என்று முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. ஒரு கணம் திகைத்துவிட்டேன். யாழ் இலக்கிய வட்டத்துக்கும், ஈழத்து இலக்கிய வட்டாரத்துக்கும், மதுரகவியின் இழப்பு மிகப் பெரியது!

தெலுங்கு நடிகையான சாரதாவுக்கு தெலுங்குப் படங்களால் புகழ் வரவில்லை. பிறகு தமிழ்ப்படங்கள் சிலவற்றில் நடித்தும் நட்சத்திரப் பதவியைப் பிடிக்க முடியவில்லை. தனக்குத் தெரியாத மலையாள மொழிப் படத்தில் நடித்தார். திடீரென்று புகழின் உச்சிக்கே ஏறிவிட்டார். 'ஊர்வசி'ப் பட்டமும் பெற்றார். இந்திப்படத்தில் நடித்து அகில இந்திய நட்சத்திரமாகவும் ஆகிவிட்டார்! அதிர்ஷ்டம் வரவேண்டுமென்றால் அது எப்படியோ வந்தே விடுகிறது!



# பசுமை நினைவுகள்

## இளைஞர் கும்மாளம்

சுவாமி விபுலானந்தர் தலைமை தாங்கும் ஓர் ஆண்டு விழா.

கற்பனைக் களஞ்சியம் வே. மகாலிங்கசிவம், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை என்போர் சொற்பொழிவாற்றும் விழா.

ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்து இளைஞர் பேசும் ஒரு பேச்சுப் போட்டி. தங்கப் பதக்கம். வெள்ளிப் பதக்கம் பரிசு.

இளைஞர்களினதும், அறிஞர்களினதும் கட்டுரை கதைகள் அடங்கிய மலர் வெளியீடு.

அருமையான சங்கீதக் கச்சேரி.

அதுவரையும் எழுதிய எழுத்தாளரில் (இளைஞர்) இருவருக்குப் பரிசு.

திறமையாக எஸ். எஸ். ஸி; ஜே. எஸ். ஸி. வகுப்புகளை நடாத்திய பாடசாலை ஒன்றுக்கு வெள்ளிக் கிண்ணம்.

கூட்டத்தில் கலந்து கொள்வோர் எல்லோருக்கும் மத்தியான போசனம்.


இப்படியான ஒரு விழா-இளைஞர் சமுதாயத்துக்கெனவே-நடத்தப்பட்டால்...கற்பனை செய்து பாருங்கள்....!

ஆம், இப்படியான ஒரு விழா இற்றைக்கு முப்பத்து மூன்று வருடங்களுக்கு முன் நடாத்தப்பட்டது. ஈழகேசரி பொன்னையா அவர்கள் தமது ஈழகேசரி இளைஞர் சங்கத்தினர்க்காக இதை நடாத்தினர். பிரபல எழுத்தாளர் சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் தூண்டுதலினால் இது நடைபெற்றது. 'சோ. சி.' அவர்கள்தான் இந்த இளைஞர் சங்கத்தின் பிதா, 'தாத்தா'

தமிழ்ப் பத்திரிகை உலகத்திலே முதல் முதல் ஏற்பட்ட ஈழகேசரி இளைஞர் சங்கத்தின் முதலாவது ஆண்டுவிழாவும் பரிசளிப்பு முதலிய கொண்டாட்டங்களும் 20-5-39 சனிக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும் என 14-5-39ஆந் திகதி ஈழகேசரியைப் பார்த்த நாள் தொட்டு — ஒரு வாரமாக — என் மனம் குதூகலத்தில் மிதந்தது.

காரணம், ஒரு வருடத்துக்கும் மேலாக இளைஞர் சங்க-கல்வி அனுபந்தத்தில் எழுதிய எழுத்தாள நண்பர்களை—இளைஞர்களை—சந்தித்து உரையாடலாம் என்பது ஒன்று. நானே எழுதித் தயாரித்த ஒரு பேச்சை ஒரு இளைஞர் பேச்சுப் போட்டியில் பேசப் போகிறார். அது எப்படி இருக்கும்? முடிவு என்னவாகும்? என்ற அவா இரண்டாவது. எனது கன்னிப் படைப்பான 'காற்றில் விழுந்த கோதும் காலிற் குத்திய முள்ளும்' என்ற கட்டுரை கல்வி மலரில் வெளி

இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன்



வருகிறது என அறிந்தேன். அதை அச்சில் பார்த்துவிட வேண்டும் என்ற தணியாத தாகம். இது மூன்ருவது.

விடிந்தது. ஆம். 20-5-39 சனிக்கிழமை விடிந்தது.

'பஸ்' வண்டிகள் எங்கள் கிராமங்களை எட்டிப் பார்க்காத காலம். தெல்லிப்பழை புகையிரத ஸ்தானத்துக்கு (2 1/2 மைல்) நடந்தே சென்றேன். அங்கு நான் முதன் முதலாக அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி என்போரை மிகச் சிறுவர்களாகக் கண்டேன். அவர்களும் என்னைப் போலவே அந்தக் கூட்டத்துக்குச் செல்ல வந்தவர்கள்தான். என்னிலும் பார்க்க அவர்கள் மனமகிழ்வு கொண்டிருந்தார்கள். புகையிரதத்தில் ஒரே பேச்சு! பேச்சு! பேச்சு!!

வண்ணை-வைத்தீஸ்வர வித்தியாலயம் நிரம்பி வழிந்தது. அநேகமாக பதினுறு வயதுக்குக் குறைந்த இளைஞர்களும் ஆசிரியர்களும்தான். யாரை யார் சந்தித்தாலும் உமது பெயர் என்ன? எங்கே படிக்கிறீர்? என்ன எழுதுகிறீர்? என்ற வினுக்கள்தான். ஒரே கும்மாளந்தான். அந்தக் கும்மாளத்தில் ஒருவராக தி. ச. வரதராசன் எனக்கு அறிமுகமானுர். சுவாமி விபுலானந்தா அவர்கள் தலைமை தாங்க கூட்டம் ஆரம்பமாயிற்று. சொல்வன்மை என்ற தலைப்பிலே ஆற்றெழுக்கான வசன நடையில் ஏற்ற இறக்கம் எதுவுமின்றி ஆடாமல் அசையாமல் சுவாமியவர்கள் பேசினுர்கள். தலைமையுரை முடிந்ததும் இளைஞர் சங்க அங்கத்தவர்களின் பேச்சுப் போட்டி ஆரம்பமாயிற்று. மத்தியஸ்தர்களாக அ. சரவணமுத்து (வித்தியாதரிசி), ச. அம்பிகைபாகன் (வித்தியாலய அதிபர்), து. சீனிவாசகம் (ஆசிரியர்) என்போர் அமர்ந்தனர். 21 பேர் பேசினர். பின்னர் ஏழு பேர் தெரிவுசெய்யப்பட்டு மறுபடியும் பேசினர். இந்தப் பேச்சுப் போட்டியைப் பற்றி 'சோ. சி.' பின்வருமாறு எழுதியுள்ளார் :-

"பேச்சும் நீயோ நானே என்று ஒன்றிலொன்று உச்சமாக இருந்தது. மத்தியஸ்தர்களாக இருந்தவர்களுக்கும் சரியான சில்லெடுப்புத்தான். எனக்கென்ருல் உள்ளபடியே மண்டைவலி எழும்பி விடும்."

இறுதியாக முடிவு அறிவிக்கப்பட்டது.

**1**ஆம் பரிசு : நாவலர் தங்கப் பதக்கம். சி. சிவானந்தன், மகாதேவ வித்தியாசாலை, குரும்பசிட்டி.

**2**ஆம் பரிசு : இராமநாதன் வெள்ளிப் பதக்கம், ஆ. நடராசா, அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.

**3**ஆம் பரிசு : புத்தகப் பரிசு நா. தம்பிராசா, அரசினர் பாடசாலை, புன்னலைக்கட்டுவன்.

எனக்கு ஒரே சந்தோஷம். நான் எழுதித் தயாரித்த - மிகச் சாதாரண வசனநடையில் எழுதி உதவிய 'நாட்டுப் புறத்தில் தோட்டக்காரன்' தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டதே என்பதில். அதைப் பேசிய இளைஞர் சி. சிவானந்தன் (தற்போது குருநாகல் பகுதியில் தலைமையாசிரியராய் இருக்கிறார்) எங்கள் ஊர்ப் பாடசாலையில் படித்தவர். நல்ல பேச்சாளர். அவர் பேச்சைப்பற்றியும் அப்பேச்சுக்குத் துணை செய்த வசனநடை பற்றியும் 'தாத்தா'பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார் :-

ஆறுமுக நாவலருடைய நாமம் பொறிக்கப்பெற்ற தங்கப் பதக்கம் குரும்பசிட்டி மாணவர் ஒருவருக்குக் கிடைத்தது. குறித்த மாணவர் பட்டிக்காட்டு ஆசாமி போல நடித்து நிகழ்த்திய பேச்சு அதி விநோதமாக இருந்தது. பேச்சும் நடிப்பும் ஒன்றை ஒன்று கௌவி நின்றன. அவை இரண்டுக்கும் இன்றியமையாத துணைபுரிந்த பாஷை நடைக்கு என்து மனமார்ந்த நன்றியறிதலைச் செலுத்துகிறேன்''

பேச்சுப் போட்டி முடிவடைகிறது. ஈழகேசரி கல்வியனுபந்தத்தில் கட்டுரை எழுதியவர்களில் திறமையுள்ள எழுத்தாளர்களெனக் கண்ட இருவருக்குப் புத்தகப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

**1**ஆம் பரிசு ; அ. ந. கந்தசாமி. (மகாஜன ஆங்கில வித்தியாசாலை, தெல்லிப்பழை).

**2**ஆம் பரிசு தி. ச. வரதராசன். (சைவப்பிரகாச வித்தியாசாலை, மூளாய்).

பிற்காலத்தில் மிகப் பிரபலமாக விளங்கிய இரு எழுத்தாளர்களை 'சோ. சி.' அவர்கள் மிகச் சிறு வயதிலேயே எப்படி இனங் கண்டுகொண்டார் என்பது புதுமையிற் புதுமை !


அடுத்து 1938ஆம் ஆண்டு எஸ். எஸ். ஸி., ஜே. எஸ். ஸி. வகுப்புகளில் மிகத் திறமையாகச் சித்தியெய்துவித்த உடுவில் பெண்கள் துவிபாஷா பாடசாலைக்கு வெள்ளிக் கிண்ணம் பரிசளிக்கப்பட்டது. அடுத்த நிகழ்ச்சி தான் எல்லோருக்கும் மனமகிழ்ச்சியை அளித்த நிகழ்ச்சியாகும். கூட்டத்தில் கலந்துகொண்ட 250 பேருக்கும் அதிகப்படியானவர்களுக்கு ஸ்ரீமான் நா. பொன்னையா அவர்கள் வித்தியாலயத்திலே சமைப்பித்து சம பந்தியாக மத்தியானப் போசனம் அளித்த காட்சி ! அப்பப்பா ! அதை நான் எப்படி வருணிப்பது !

போசனத்துக்குப் பின் சங்கீதக் கச்சேரியும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. மகாலிங்க சிவமவர்கள் மாம்பழக் கவிச்சிங்க நாவலரைப் பற்றிப் பொழிந்து தள்ளினுர். பண்டிதர் 'சி. க.' அவர்கள் குழந்தைகளைப் பயிற்றல் சம்பந்தமாக நகைச்சுவைசொட்டப் பேசினுர். எல்லாவற்றுக்கும் மேலாக ஈழகேசரி இளைஞர் சங்கம் வெளியிட்ட கல்விமலரைக் கூட்டத்திலே கொடுத்தார்கள். என்ன அழகிய மலர் ! **155** பக்கமுள்ள அந்த மலர். உயர்தர காகிதத்தில் முத்துப்போன்ற எழுத்தில் உள்ள அந்த மலர்-**50**சதம்!

அந்த மலரை மறுபடியும் இப்போது பார்க்கிறேன். இருபதுக்கு மேற்பட்ட அறிஞர்களும் இருபது இளைஞர்களும் எழுதியிருக்கும் அருமையான விடயங்கள் கண்ணிற் படுகின்றன. அந்தக் காலத்திலேயே அ. ந. கந்தசாமி (ராணி துர்க்கா), அ. செ. முருகானந்தன் (பாரததேவியின் பாலியவித்தகன்), தி. ச. வரதராசன் (பிரிந்தவர் கூடினுல்) கனக. செந்திநாதன் (காற்றில் விழுந்த கோது) என்போர் எழுதிய படைப்புகள் கண்ணிற் படுகின்றன.

அவை எழுப்பும் பசுமை நினைவுகள்தான் எத்தனை!

அந்தக் காலம்போல — இப்போதும் பத்திரிகை நடாத்துவோர் வருடம் ஒரு முறையாவது எழுத்தாளர்களை இரசிகர்களை—கூட்டிப் பரஸ்பரம் அறிமுகம் செய்து ஒரு விழாவினை நடாத்திஞல்.....என்று கேட்கத் தோன்றுகிறது.



புவனேஸ்வரி பிக்சர்சாரின் ஒரு படப்பிடிப்புக்காக சமீபத்தில் சிவாஜி - ஜெயலலிதா கோஷ்டியினர்காஷ்மீர் சென்ருர்களல்லவா? அந்தக் கோஷ்டியில் ஒரு வெள்ளைக் குதிரையும் இருந்தது. படத்தில் கதாநாயகன் செங்கோடனுக வரும் சிவாஜி சவாரி செய்வதற்காக இந்தக் குதிரை சென்னையிலிருந்து கொண்டு செல்லப்பட்டது. சிவாஜியும் ஜெயலலிதாவும் சேர்ந்து இந்தக் குதிரையில் மலைச்சரிவுகளில் படு வேகமாகச் சவாரி செய்யும் பல காட்சிகள் படமாக்கப்பட்டிருககின்றன!

சமீபத்தில் நடைபெற்ற சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் விசேஷ மகாநாட்டில் சண்முகதாசனின் பொதுச் செயலாளர் பதவி உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டுமென்றும், ஏப்ரல் **'72** கலவரங்கள் சம்பந்தமாக கைது செய்யப்பட்டிருக்கும் எல்லா தொழிற்சங்க வாதிகளையும் உடனடியாக விடுவிக்கவேண்டுமென்றும் சண்முகதாசன் அறிக்கை விட்டிருக்கிருர்.

கடல்மட்டத்தில் இருந்து சிறிது உயரம் பறக்கும் இயல்புள்ள மீன்கள் வங்கக் கடலில் நிறைய உண்டு. 'பறவைக் கோலா' என இம் மீன்கள் அழைக்கப்படுகின்றன. மார்பகத் துடுப்பு பரந்து இறக்கை போன்று இருப்பதே பறப்பதன் ரகசியமாகும். எமது நாட்டிலும் சிலகாலங்களில் இம் மீன்கள் மலிவான விலையிலே கிடைக்கின்றன.

நஞ்சு எந்நேரமும் நஞ்சல்ல. குறித்த நேரத்தைப் பொறுத்தே அதன் இயல்பும் இருக்கும். ஒரு நாளில் குறித்த நேரத்தில் உட்கொள்ளப்பட்ட நஞ்சு ஆளைக் கொல்லலாம். ஆனால் அதேநாளில் வேறு காலத்தில் கொடுக்கப்பட்டால் நஞ்சு இந்த ஆளைக் கொல்லாமல் விடலாம். இதே போலவே மருந்தும். குறித்த நேரத்தில் மருந்தினை அருந்தினால் தான் வேகம் தணியும். வேறு கெட்ட நேரங்களில் மருந்தினை அருந்தினால் நோயின் வேகம் கூடுமே ஒழிய குறையாது.

உருண்டு திரண்ட உடலைப்பெற பயிற்சி பெறுவதில் அதிக பலன் இல்லை. இது சோவியத் ஆராய்ச்சியாளர்கள் கண்ட முடிவு. உடல் அழகாக இருக்கலாம். ஆனால் உடல் நலத்தில் இவர்கள் கீழ் நோக்கியவர்களாகவே இருப்பர்.

நேரத்திற்கு உண்ணும் உணவும், உயிர்ச்சத்து நிறைந்த அளவான உணவுமே பெண்களை அழகாக இருக்க உதவுகின்றன. அளவு மீறிய உணவுகள் வேண்டாத சதையை வளர்த்து அழகைக் கெடுத்து விடுகின்றன.

பண்ணையில் கூலிஆளர்க இருந்து படிப்படியாக முன்னேறி கல்லூரிப் படிப்பில்லாத ஒருவர் ஜப்பானில் புதிய பிரதமராக பதவி ஏற்றுள்ளார். இதுநாள் வரை இருந்த பிரதமர் 'சாட்டோ' ஓய்வு பெறுவதை ஒட்டியே சர்வதேச வர்த்தக தொழில் அமைச்சராக 'குகியிடனு' இப்பதவியினை ஏற்கிறார். 34 வயதே நிரம்பியவர் இவர்.

இலங்கையில் சில தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற இருக்கின்றன. சிறீலங்கா சுதந்தரக்கட்சி... ஐக்கிய தேசியக் கட்சி... என்பவையின் நேரடிமோதல் நடைபெற உள்ளது. சகல அரசியல் விரும்பிகளின் எண்ணமும் கருத்தும் இங்கேயே இருக்கின்றது. தற்போதய ஆட்சியிடம் மக்கள் வெறுப்பையா, விருப்பையா வைத்திருக்கின்றனர் என்பதை இந்தத் தேர்தல்கள் எடுத்துக்காட்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

— திருமலை சுந்தா

'அம்புலிமாமா' என்ற சிறுவர் பத்திரிகையை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். 25 வருடங்களுக்கு முன்னால் நாகிரெட்டி அதையும், அதனுடைய தெலுங்குப் பதிப்பான 'சந்தமாமா' என்பதையும் ஆரம்பித்தார். அவற்றின் ஆசிரியர் சக்கரபாணி. அம்புலிமாமா இப்போது இந்தியாவில் பத்து மொழிகளில் வெளியாகிறது. அவற்றில் ஆங்கிலப் பதிப்பும் ஒன்று. பத்து மொழிகளிலுமாக மாதந்தோறும் ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனையாகிறது இந்தச் சிறுவர் சஞ்சிகை!



கம்யூனிஸ்ட் (மொஸ்கோ சார்பு) கட்சியில் பெரிய புரட்சி ஏற்பட்டிருக்கிறது. இதுவரை கட்சியின் முக்கியஸ்தராக விளங்கிய அமைச்சர் பீட்டர் கெனமன் தமது முக்கியத்தை இழந்துவிட்டார். அரசாங்கத்துடன் சில விஷயங்களில் மாறுபட்ட கருத்துக்கொண்ட டாக்டர் விக்கிரமசிங்காவின் கையில் இப்போது கட்சியின் அதிகாரம் வந்திருக்கிறது. கூட்டுமுன்னணி அரசாங்கத்தில் 'கூட்டாளித்' தனத்தில் ஒரு மாற்றம் ஏற்படுவதை இனி நிச்சயம் எதிர்பார்க்கலாம். கம்யூனிஸ்ட் கட்சி இனிமேல் அரசாங்கத்தின் தீர்மானங்களுக்கெல்லாம் ஆமாம் போட்டுக் கொண்டிருக்காது. தன்னுடைய இலட்சிய அடிப்படையில் கம்யூனிஸ்ட் கட்சி தலை நிமிர்ந்து செல்லுமென்று எதிர்பார்க்கலாம்!

அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டபடி, பத்திரிகைக் கவுன்சில் அமையாது என்பது பெரும்பாலும் நிச்சயம்! எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாரும் இந்தக் கவுன்சிலின் அதிகாரங்களைக் கண்டித்திருக்கிறார்கள். பத்திரிகைகளை ஒரே முகமாகத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. இந்த அரசாங்கம் தன்னிடமுள்ள குறைகள் வெளியில் தெரியாமல் மறைப்பதற்காகவே இம் மசோதாவைக் கொண்டு வந்திருப்பதாக ஒரு அருமையான கருத்துப்படத்தை 'ஒப்சேர்வர்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அரசாங்கக் கட்சிக்குள்ளேயே இதுபற்றி அபிப்பிராய பேதம் இருப்பது தெரிகிறது. அமைச்சர்கள் சிலருக்கும் இது திருப்திதரவில்லை. ஆகவே, இந்த மசோதா நிச்சயமாகத் திருத்தப்பட்டு விடும். ஆனால் திருத்தப்படும் மசோதா எப்படியிருக்குமோ தெரியவில்லையே!

•

சீனாவின் முக்கிய நகரங்கள் எல்லாவற்றுக்கும் கீழே பாதாளத் தெருக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நகரின் மேலேயுள்ள தெருக்களிலிருந்தும், வீடுகள், கடைகள், தொழிற்சாலைகளிலிருந்தும் இந்த பாதாளத் தெருக்களுக்குச் செல்ல வழிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பகைவரின் விமானத் தாக்குதலிலிருந்து தப்புவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அபாய அறிவிப்புக் கொடுக்கப்பட்ட ஐந்துநிமிட நேரத்துக்குள் நகரத்திலுள்ள எல்லா மக்களும் இந்தப் பாதாள நகரத்துக்குள் சென்றுவிட முடியும். இந்தப் பாதாள நகரங்களில் மின்சாரம், தொலைபேசி, வானொலிச் சேவைகள் எல்லாம் உண்டு. வைத்திய சேவைக்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. அவசியமான பொருள்களை வாங்குவதற்குக் கடைகள்கூட அங்கே உண்டு!

# நளினியின் நாயகன்

'வரதர்'

“ஐயையோ, இதென்ன இது! . . . இப்படியெண்டா நான் வந்தேயிருக்கமாட்டன்.”!

நளினி புடைவைத் தலைப்பால் முகத்தைத்துடைத்துக் கொண்டு, “அப்படிச் சொல்லாதேங்கோ . . . எனக்காகவேண்டி நீங்கள் இரங்குவதைக் காண மனசுக்கு ஆறுதலாயிருக்கு. அந்த ஆறுதல் உள்ளே போனபடியால்தான் என்னுடைய மனசுக்குள்ளை கிடந்த கவலை பொங்கிக் கொண்டு வெளியாலை வந்தது . . . உங்களைச் சந்தியாட்டி. . . இதுகளையெல்லாம் நானே என்னுக்குள்ளை நினைச்சு நினைச்சு, இதயம் வெடிச்சுச்செத்தாலும் செத்துப் போவன். . . நீங்கள் வந்தது எனக்கு எவ்வளவு மன ஆறுதலாயிருக்கு...”

“நான் வந்து ஒரு மட்டோடை இருந்திருக்கலாம். உங்களுக்குத் தெரியாமலிருந்த விஷயங்களையும் உங்களிட்டைச் சொல்லி கவலையைக் கூட்டியெல்லோ போட்டன் . . .”

“நீங்க சொல்லாட்டியும் இவர் ஏதோ எக்கச் சக்கமாய் தொந்தரவுகள் வைத்திருக்கிறாரெண்டு என்னாலை ஊகிக்க முடியுது . . . நேத்துக் காலைமை அப்பாவும் இருக்கேக்கை மரகதம்மா எண்டொரு மனுஷி, கொட்டாஞ்சேனையிலை இருக்கிறதாம்,—அந்த மனுஷி இங்கை வீட்டையே வந்திட்டுது . . .”

“எடட, மனுஷி அவரிட்டைக் கேக்கிறதுக்கு இங்கை யேன் வந்தது? அந்த மனுஷிக்கும் ஐந்நூறு ரூபா குடுக்கவேணுமாக்கும்...”

“தவணைக்குக் குடுக்காட்டி ஆரெண்டாலும் பேசாமலிருப்பினமே? மனுஷியிலை ஏன் குறை சொல்லுவான்?... மனுஷி வந்திட்டுப் போன நேரம் தொடக்கம் எனக்கு ஒரே கவலை. அப்பாவிட்டையும் பேசேலாது. அவருக்குச் சரியான கோபமும் கவலையும். அந்தக் கவலையோடைதான் யாழ்ப்பாணம் வெளிக்கிட்டுப் போனவர். என்னுடைய கவலையை ஆரிட்டைச் சொல்லி ஆறவெண்டு துடிச்சுப்போனன். எனக்கென்னவோ - உண்மையை மனந்திறந்து சொல்லுறன் - உங்களிலை ஒரு நம்பிக்கை. நேற்றைக்கு நீங்கள் வந்து போன பிறகு ‘இவர்’ உங்களுக்குச் சினேகிதர் எண்டு நீங்களும் சொன்னபடியா, உங்களிட்டைத்தான் என்னுடைய கவலைகளைச் சொல்லித்தீர்க்கலாமென்று.,.

‘கிறிங், கிறிங்...கிறிங், கிறிங்’ ... - தொலைபேசி, உணர்ச்சிவசப்பட்ட அந்த இரண்டு உள்ளங்களை முறித்துக் கொண்டு அலறுகிறது.

சுந்தரமும் நளினியும் திடுக்கிட்டவர்களாய் ஒரு கணம் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர். மறு கணம் நளினி எழுந்துபோய் றிசீவரைத் தூக்குகிறாள்...

''யெஸ், யெஸ்...'' என்றவள், றிசீவரைக் வாயிலிருந்து கீழே பதித்து, கையால் மூடிக்கொண்டு ''யாழ்ப்பாணம் 'கோ'லாம்....'' என்கிறாள், சுந்தரத்தைப்பார்த்து. சுந்தரமும் மிகுந்த ஆவலோடு எழுந்து சற்றுக் கிட்டப் போய் நிற்கிறான், நளினி மறுபடியும் றிசீவரைக் காதருகில் வைத்துக் கொண்டு ''ஓமோம். நளினி தான் பேசிறேன்....என்னப்பா ...இங்கையா...'' என்றவள், மறுபடியும் றிசீவரைக் கீழே பதித்துக் கொண்டு, சுந்தரத்தைப் பார்த்து மெல்லிய குரலில் "அப்பா பேசிறார். இங்கை வேறை ஆர் நிக்கிறதெண்டு கேக்கிறார்.,.'' என்கிறாள்.

ஒருகணம் சுந்தரத்துக்கும் 'திக்' என்கிறது. 'அவர் ஏன் அப்படிக் கேட்கிறார்' என்று நினைத்தவன், நளினியைப் பார்த்து, 'நான் நிற்கிறேனென்று சொல்லுங்கோவன்' என்கிறான். நளினிக்கும் யோசிக்க நேரமில்லை. உடம்பெல்லாம் ஏதோ ஒருவிதமாய் பதறுகிறது. "...அப்பா,.....இங்கை இவர் மிஸ்டர் சுந்தரம் இப்பதான் வந்திருக்கிறார். நீங்கள் ஏதோ விசா...'' அவள் வசனத்தை முடிக்கு முன்பே, மறுபடியும் சுந்தரத்தை நோக்கி, உங்களை உடனே பேசட்டாம்.....இந்தாருங்கோ....என்னவோ....'' என்று சொல்லவும் சுந்தரம் ஓடிப்போய் றிசீவரை வாங்குகிறான்.

''ஓமய்யா, சுந்தரந்தான்.. சொல்லுங்கோ... அ! .... என்னது !.... ஐயையோ ! .... எப்படி....''

சுந்தரம் பேசுவதையும் அவனுடைய முகம் போகிற போக்கையும் பார்த்துக்கொண்டிருக்கும் நளினி துடியாய்த் துடிக்கிறாள்.

"...ம்...ம்ஓமய்யா...நான் கவனமாய்ச் சொல்லுறன். சண்முகமையாவுக்கும் சொல்லுறன். .,.இண்டைக்கே வெளிக்கிடுவினம்....சரி ஐயா...ஓம்...''

சுந்தரம் றிசீவரை வைத்துவிட்டு, நளினியைப் பார்க்கிறான். அவனுடைய முகம் பேயறைந்த மாதிரி இருக்கிறது,

நளினி வாயைத் திறந்து கேட்கவும் சக்தியற்றவளாய், சுந்தரத்தைப் பார்க்கிறாள்.

சுந்தரம் சொல்கிறான்: "உங்கடை மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கோ. ஒரு கவலையான விஷயம் சொல்லப்போறன்.... வேலாயுதத்தின் நிலைமை..அவர் நஞ்சு குடிச்சுவிட்டாராம்...... உங்களைச் சண்முகம் ஐயாவோடு இண்டைக்கே வெளிக்கிட்டு வரட்டாமாம்....'' — வேலாயுதத்தின் கதை முடிந்துவிட்டதோ என்ற நினைவு சுந்தரத்தின் உள்ளத்தை நடுங்க வைக்கிறது. நளினியின் உள்ளமும் நடுங்குகிறது. தன்னுடைய சக்தியெல்லாம் கால்வழியாகக் கீழே இறங்கி விடுவது போலவும், அந்த வீடு, ஏதோ மேலும் கீழுமாக ஆடுவதுபோலவும் ஒரு உணர்வு

நளினிமீது படர்கிறது. அவள் தடுமாறிக் கீழே சரியப் போக—

சுந்தரம் எட்டி அவளைத் தாங்கிக் கொள்கிறுன். மெதுவாக அவளைக் கொண்டுவந்து செற்றியில் சரித்து, அவள் தலையைத் தன் மடிமீது வைத்துக் கொள்கிறுன்.

என்ன செய்வதென்று தெரியாமல் நிமிர்ந்து பார்த்தவன், எதிரே மணியன் நிற்பதைக் கண்டதும், "கொஞ்சத் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடிவா தம்பி !'' என்கிறுன்.

மணியன் வருவதற்கிடையில் அவள் கன்னத்தை மெதுவாகத் தட்டி, "நளினி! நளினி!'' என்று மெல்லக் கூப்பிட்டுப் பார்க்கிறுன். அவளுக்கு உணர்வில்லை.

மணியன் கொண்டு வந்த தண்ணீரைக் கையில் கொஞ்சம் எடுத்து அவள் முகத்தில் தெளிக்கிறுன் சுந்தரம். கண்களைத் தடவி விடுகிறுன்.

எங்கேயோ இருண்ட கடலுக்கடியிலிருந்து மெல்ல மெல்ல மேலெழுந்து வருவது போல நளினிக்குத் தோன்றுகிறது. மெல்லிய தென்றல் காற்றுஅவளைப்பார்த்து 'நளினி! நளினி !' என்று அழைக்கிறது. மெல்லக் கண்களை விழிக்கிறுள்.

"நளினி, ஒன்றுக்கும் யோசியாதையும்...நான் இருக்கிறன் தானே !.....மெதுவாக எழும்புங்கோ....இண்டைக்கு யாழ்ப்பாணம் போகவேணும்...''

நளினிக்கு நினைவு வருகிறது.


சுந்தரத்தின் கையைப்பிடித்துக் கொண்டு "நீங்கள் இருக்கிறியளா ?'' என்று கேட்கிறுள்.

"ஓம், நான் இருக்கிறன் ! நீர் ஒண்டுக்கும் யோசியாதையும்... சண்முகமையாவுக்கு நான் டெலிபோன் பண்ணுறன். நேரமாகுது. நீங்களும் வெளிக்கிடுங்கோ...!

நளினி தலையை நிமிர்த்தி மெதுவாக எழுந்திருக்கிறுள்.

'ஓம், நான் இருக்கிறேன்!' என்று சுந்தரம் சொன்ன வார்த்தைகள் அவள் உள்ளத்தில் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருக்கின்றன ! ● ● ●

(நான் ஒரு பெரிய நாவல் எழுத ஆசைப்பட்டேன். சில மாதங்களுக்கு முன் சேர்ந்தாற்போல ஒரு வார ஓய்வு கிடைக்கவே மளமளவென்று இந்தக் கதையை எழுதினேன். அதாவது நான் நினைத்திருந்த நாவலுக்கு இந்த அத்திபாரத்தை அழகாகப் போட்டு விட்டேன். அத்திபாரம் போட்டுவிட்டால், மேலே கட்டிடம் எழுப்புவது சிரமமாக இருக்காது; என்னுடைய பலதுறைப்பட்ட வேலைத் தொந்தரவுகளுக்கிடையேயும் அந்தக் கட்டிடத்தைக் கட்டி எழுப்பி விடலாமென்று நினைத்திருந்தேன் — ஆனுல் நடைமுறையில் அது சாத்தியமில்லையென்பதை இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆகவே வாசகர்கள் என்னை மன்னிப்பார்களாக. இந்த அளவிலேயே இந்தக் கதையில் ஒரு முழுமையைக் கண்டுவிட்டவர்கள் திருப்தியடையுங்கள். இதற்குமேல் உங்கள் இஷ்டம் போல மாளிகையைக் கற்பனை செய்து பார்க்க முடிந்தவர்கள் அப்படியே அனுபவித்துக் கொள்ளுங்கள். மறுபடியும் இந்தக் கதையை நானே தொடர்ந்து எழுதுவேனு? அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானுல் அதற்காக மிகுந்த மகிழ்ச்சியடைகிறவன் நானுகத்தான் இருக்கமுடியும்! — வரதர்)



‘சிறுபான்மை இனத்தினர் தமக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளைப் பெரும்பான்மை மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியே பெறவேண்டும். அப்படியல்லாது அவர்களுடன் மோதிப் பெறலாமென்று நினைத்தால் பெரு நாசமே வந்து சேரும்’ என்று சமீபத்தில் வி. பொன்னம்பலம் பேசியிருக்கிறார். வழக்கமான உபதேசம் போலத் தோன்றினாலும் இந்தக் கூற்றில் மிகுந்த உண்மை இருப்பதை தமிழ்த் தலைவர்கள் கவனிக்கவேண்டும்!

இலங்கையில் பெண்களின் தொகை ஆண்களை விட மிக அதிகமாக இருப்பதால், இன்னும் சில காலத்தில் இலங்கைப் பெண்கள் பலருக்கு மாப்பிள்ளைகள் கிடைக்காமலே போய்விடுமென்று இந்திய சஞ்சிகையொன்று சமீபத்தில் குறிப்பிட்டிருந்தது. ஆனல் கடைசியாக எடுக்கப்பட்ட சனத்தொகை விபரப்படி **6525648** ஆண்களும், **6185195** பெண்களும் இந்த நாட்டில் இருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இந்தியச் சஞ்சிகைக்கு எங்கிருந்துதான் இலங்கையைப்பற்றிய விபரம் கிடைத்ததோ தெரியவில்லை!

‘மதுரகவி நாகராஜனின் குடும்ப பாதுகாப்பு நிதியொன்றை கலாச்சார அமைச்சு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்’ என்று பாண்டியன் தாழ்வு ச. ச. நிலையத்தினர் கேட்டுள்ளனர். எனக்குத் தெரிந்த வரையில் கலாச்சார அமைச்சு இப்படியொரு நிதியை ஏற்படுத்திக் கொடுக்கும்முறை இருப்பதாகத் தெரியவில்லை. இதற்கு முன் ஒரு பிரபல தமிழ் எழுத்தாளரின் மரணச் சடங்குச் — செலவுக்கு வேறு வழியில்லாததால் அன்றைய செலவுக்காக ஒரு தொகைப் பணம் கொடுக்கப்பட்டது. எழுத்தாளர்களுக்கு நிதி சேர்க்க விரும்புகிறவர்கள் அரசாங்கத்தை நம்பியிருக்காமல் பொதுமக்களிடம்தான் செல்லவேண்டும்!

கல்வி அமைச்சர் அரசியல் ‘சேவை’ செய்து **35** ஆண்டுகளாகி விட்டன. இதைப் பிரமாதமாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவருடைய சேவை நினைவாகஒரு மண்டபம் நிறுவுவது, சிறப்பு மலர் வெளியிடுவது, பாராட்டுக் கூட்டங்கள் நடத்துவது என்றெல்லாம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இலங்கை மக்கள் அனைவருக்கும் அரசியல் சேவை செய்து வரும் கல்வி அமைச்சருக்கு எடுக்கும் இந்த விழா அமைப்புச் சபையில் முஸ்லிம் பிரமுகர்கள் பலரும், சிங்களப் பெரியார்களும் இடம்பெற்றிருக்கிறார்கள். பத்திரிகைச் செய்தியின்படி அந்தச் சபையில் தமிழ்ப் பிரமுகர் ஒருவரின் பெயரையும் காணவில்லையே! ஏன்?

▮ ரஷ்யா தனது மேற்கு ஐரோப்பியப் பகுதியில் 33 டிவிசன் துருப்புக்களை வைத்திருக்கிறது. ஆனால் சீன எல்லையோரத்தில் 44 டிவிசன் துருப்புக்களை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது யப்பானியரின் போர்க் கூவலுக்கு எதிராக நிறுத்தப்பட்ட ரஷ்யப் படைக் கலத்திலும் பார்க்க இது மிகவும் அதிகமானதென்று சொல்லப்படுகிறது. சீனாவைப்பற்றி ரஷ்யா மிகவும் அச்சம் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல. சீனாவின் படைப்பலத்தில் மிகுந்த மதிப்புக் கொண்டிருக்கிறதென்பதையும் இது காட்டுகிறது!

▮ அமெரிக்காவை முதலாளித்துவநாடென்றும், ரஷ்யாவை சோஷலிச முதலாளித்துவ நாடென்றும், இந்தியாவைப் பேராசைக்கார நாடென்றும், யப்பானை யுத்தவெறி நாடென்றும் தோழர் சண்முகதாசன் கூறியிருக்கிறார். ஆனால் அவர் போற்றுகிற மக்கள்சீனா, சமீபத்தில் பங்களா தேசத்தை ஐ. நா. வில் சேரவிடாமல் தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறதே, இந்தச் சீனாவை எத்தகைய நாடென்று கூறுவது?

▮ 'இந்திரா காந்திக்குத் துணிவிருந்தால் தமது படைகளைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பிப் பார்க்கட்டும். அந்தப் படையை எதிர்கொள்ளத் தமிழ் நாடு தயாராக இருக்கிறது!' என்று சவால்விட்டிருக்கிறார் எம். ஜி. ஆர்.! எம் ஜி. ஆர். வெறும் சினிமா நடிகர் மட்டுமல்லர்; தி. மு. க. வின் மிக முக்கியமான தலைவர்களில் அவரும் ஒருவர். ஒரு மாபெரும் மாநாட்டில் அவர் இப்படிக் கூறியிருப்பது எதனால்? பல்லாயிரக்கணக்கான பொது மக்களின் ஆதரவைக் கண்முன்னே கண்ட உணர்ச்சி வசத்தினாலா? அல்லது தி. மு. க. தலைவர்கள் ஏதாவது திட்டமிட்டுத் துணிந்து விட்டார்களா?

▮ பிரதமர் ஸ்ரீமாவோவின் மகன்அனுரா பண்டாரநாயக்காசமீபத்தில் சீனாவுக்கு விஜயம்செய்து சீனாவின் முன்னேற்றத்தை நேரில் பார்த்துவிட்டு வந்திருக்கிறார். 'எதிர்காலச்சுபிட்சத்துக்காக இன்று கொஞ்சக் கஷ்டம் அனுபவிக்கவேண்டியிருக்கிறது' என்று பிரதமரும் நிதிமந்திரியும் அடிக்கடி சொல்லி வருகிறார்கள். ஆனால் அனுரா என்ன சொல்கிறார்? 'இலங்கையில் சோஸலிசம் உதட்டளவிலேயே இருக்கிறது. மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அரசாங்கம் போகிற போக்கைப் பார்த்தால் எதிர்காலத்திலும் சுபிட்சம் ஏற்படும் போலத் தெரியவில்லை!' என்று அவர் கூறியிருக்கிறார். மகனுடைய இந்தப் பேச்சுக்காக அவரை அம்மா தட்டிக்கொடுப்பாரா அல்லது கண்டித்து வைப்பாரா என்று தெரியவில்லை!

▮ குழாய் நீரைப் பாவிப்பவர்களுக்கு இருதயம் சம்பந்தமான நோய்கள் ஏற்படும் சாத்தியங்கள் அதிகமாயிருக்கிறதென்று பிரிட்டிஷ் வைத்திய ஆராய்ச்சிக் கவுன்சில் கண்டுபிடித்திருக்கிறது!

சிறுகதை

# 'குழந்தை'யுடன் விளையாடுகிருன்!

பொ சண்முகநாதன்

குழந்தை சித்திராவை இடுப்பில் தாங்கியவாறு அவளுக்கு விளையாட்டுக் காண்பித்துக்கொண்டிருந்த வசந்தியிடம் சுந்தரம் மிகுந்த உற்சாகத்தோடு ஓடிவந்தான். அவனது மகிழ்ச்சிக்குக் காரணமான அவனது முகத்தை அவள் வியப்போடு பார்த்தாள்.

"வசந்தி ! வெளியே எனது நெருங்கிய நண்பன் சிவா வந்திருக்கிருன். அவன் எமக்கு மிகவும் வேண்டியவன் — சிறப்பாக கவனிக்க வேண்டும். நான் அவனேடு பேசிக் கொண்டிருக்கிறேன். எங்கே, நீ தேநீர்போட்டு உன் திறமையைக் காட்டு பார்க்கலாம். அதற்கு முன் பிஸ்கற்றுகளை எடுத்து தட்டில் வைத்திரு ....இதோ வந்துவிடுகிறேன்"

வசந்தி வாய் திறக்குமுன் அவன் சிவாவிடம் ஓடிவந்து அவனருகே அமர்ந்துகொண்டான்.

''சிவா! உன்னிடம் நிறையப் பேசவேண்டும். முன்பென்ருல் அடிக்கடி சந்தித்துக்கொள்வோம். இப்பொழுது நான் விரும்பினுலும் அது முடியாமலிருக்கிறதே ! நாம் கடைசியாகச் சந்தித்ததாவது உனக்கு நினைவிருக்கிறதா ?''

"ஓ...நன்ருக...உனது திருமணத்தன்றுதானே ! என்ன செய்வது சுந்தரம் ! 'றெப்பிறசென்ரேரிவ்' வேலை என்ருலே அப்படித்தானே !''

அப்பொழுது வசந்தி ஒரு கையில் குழந்தையுடனும் மறு கையில் பிஸ்கற் தட்டுடனும் வந்தாள். சுந்தரம் தட்டை அவளிடமிருந்து வாங்கி சிவாவுக்கு நீட்டினுன்.

சிவா பிஸ்கற் ஒன்றை எடுத்துச் சுவைத்தவாறு ''இவ யார் சுந்தரம் ?'' என்ருன்.

''சொன்னுப்போலை....அறிமுகப்படுத்த மறந்துவிட்டேனே!'' என்றவன், குழந்தையைக் காட்டி ''இவதான் என்னுடைய குழந்தை சித்ரா'' என்ருன். பெரியவளைக்காட்டி ''இவள் என்னுடைய தங்கை வசந்தி. அதாவது அப்பாஅம்மாவின் குழந்தை'' என்ருன்.

''எனக்குக் குழந்தைகள் என்ருல் கொள்ளை ஆசை'' என்ருன் சிவா. வசந்தி தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

திடிரென்று அப்பொழுது தான் நினைத்துக்கொண்டவனுய் ''எங்கே உனது திருமதியைக் காணேம்'' என்ருன் சிவா.

''அவவுக்குச் சுகமில்லை.... ஆஸ்பத்திரியில் விட்டிருக்கிறேன்.''

''என்ன இரண்டாவதா ? இந்தமுறை கற்கண்டா இல்லை சர்க்கரைதானு ?

மூவருமே சிரித்துவிட்டார்கள். ஆனுல் வாய் விட்டுச் சிரித்தவர்கள் ஆண்கள்தாம்.

''சிவா ! உனது பழைய குறும்பு இன்னும் விட்டபாடில்

லையா ?'' என்று சுந்தரம் தொடர்ந்து சொன்னுன். ''எனக்கும் சித்திராவுக்கும் உதவி ஒத்தாசையாக இருப்பதற்காகத் தான் வசந்தி ஊரிலிருந்து இங்கு வந்திருக்கிருள்''

''பாவம்'' என்ருன் சிவா—வசந்தியைக் கடைக்கண்களால் நோக்கியவாறு! அவள் நாணத்தால் தலை குனிந்து கொண்டாள்.

''உனது அனுதாபத்துக்கு நன்றி'' என்ற சுந்தரம், பின்னர் வசந்தியிடம் ''நீ இனி ரீயைக் கொண்டு வரலாமே!'' என்ருன்.

''அவ குழந்தையையும் கையில் வைத்துக் கொண்டு எப்படி ரீ போடமுடியும்?''-வசந்தி கேட்க வேண்டியதை சிவா கேட்டான்.

"அவள் வந்ததுமுதல் குழந்தை என்னேடு சேருவதேயில்லை. அவளை விட்டுப் பிரியவே மறுக்கிருள்'' என்றவன் வசந்தியிடம் ''நீ பேசிக்கொண்டே இரு. நான் இதோ ரீ போட்டுக் கொண்டு வருகிறேன்'' என்றவாறு உள்ளே போனுன்.

இப்பொழுது சிவா தானும் ஒரு குழந்தையாக மாறி குழந்தையோடு பழக முயன்ருன்.

'' 'குழந்தை'க்கு எத்தனை வயது நடக்குது?''

''இருபத்தி நாலு''

''சித்திரா பேபிக்கு . . .?''

அவன் சிரிக்காமலே கேட்டான்.

''ஒரு வயதும் சில மாதங்களும்.'' - அவள் சிரித்தாள்-அவனும் தான்!

''சித்திரா இங்கை கிட்ட வாங்கோ . . . நல்ல பிள்ளை எல்லே . . .''

சித்திரா எப்படிப் போவாள்? அவள்தான் வசந்தியை விட்டு நழுவமாட்டாளே! வசந்திதான் அவனருகே போனுள்.

''அச்சாப் பிள்ளை. குழந்தை என்ருல் அப்படித்தான் இருக்க வேண்டும். பெரியவர்களுடைய சொல்லைக்கேட்க வேண்டும்.''

'சொல்லுக் கேட்ட குழந்தை எந்தக் குழந்தை?' அந்தப் பெரியவருடைய நகைச்சுவை வசந்திக்கு நன்ருகப் பிடிதுவிட்டது.

---



'எவ்வளவுதான் வசதிகளும், பின்னணி பலமும் இருந்த போதிலும் ஒருவனுக்குச் சொந்தத் திறமை இல்லாவிட்டால் சினிமா உலகில் நின்றுபிடிக்க முடியாது. முதல்வரின் மகன் முத்துவுக்கு பின்னணி பலம்இருக்கிறதுதான். ஆனுலும் அவர் தனது சொந்தத் திறமையினுலேயே ஒரு சிறந்த நடிக நட்சத்திரமாகப் பிரகாசிக்கிருர்' என்று முத்துவைப் பாராட்டியிருக்கிருர் ஜெமினிகணேசன்.—அதிர்ஷ்டக்காரர் முத்து!

அவள் சிரித்து ஓய்ந்ததும் சிவா சித்திராவின் கன்னத்தைத் தட்டிவிட்டு "பேபி . . . சிரியுங்கோ பார்ப்பம்." என்றான்.

குழந்தை சிரிக்கவில்லை. முகத்தைத் திருப்பி வசந்தியின் கழுத்துக்குள் மறைத்துக் கொண்டது. வசந்திதான் சிரித்தாள். "கண்ணெல்லே . . . மாமாவுக்குச் சிச்சுக் காட்டுங்கோ." என்றாள்.

''நான் எதுவுமே கொண்டு வரவில்லை என்று பேபிக்கு என் மீது கோபமாக்கும் . . . அப்படித்தானே!'' அவன் கவலையோடு கேட்டான்.

''இல்லை . . . இல்லை . . . . அப்படியொன்றுமில்லை'' என்ற வசந்தி பின்னர் சமாளித்துக் கொண்டு ''எங்கே சித்திரா, அப்படி மாமாவுக்குச் சொல்லுங்கோ பார்ப்பம்'' என்றாள்.

"உண்மையிலேயே உனக்கு என்மீது கோபம் இல்லையென்றால் இதோ இந்த பிஸ்கற்றை யாவது சாப்பிடு பார்க்கலாம்'' அவன் தட்டிலிருந்து ஒரு பிஸ்கற்றை எடுத்தான்.

''ஐயோ...பிளீஸ்... வேண்டாம்...''

''இல்லை சாப்பிடத்தான் வேண்டும்'' என்றவன் பிஸ்கட்றை இரண்டாக முறித்து அதிலொன்றைச் சித்திராவின் வாய்க்குள் திணித்தான். குழந்தையோ அதை எச்சிலுடன் சேர்த்து வசந்தியின் பின் சட்டையில் வெறுப்புடன் துப்பிவிட்டது.

"எக்யூஸ் மி...என்னை மன்னிக்கவேண்டும் வசந்தி." என்றான் சிவா. பின்னர் தனது கைக்குட்டையால் அதைமெள்ள துடைப்பதில் ஈடுபட்டான். வசந்தி கண்களை இலேசாக மூடிய வாறு—அவள் அதைத் தடுக்க விரும்பவில்லை.

"இப்பொழுது சரி வசந்தி'' அவன் இப்படிச் சொன்னதும் தான் அவள் இந்த உலகத்துக்கு வந்தாள்.

சிவா பெருமூச்சுடன் சொன்னான். "என்ன செய்வது? எனது போதாத காலம். நான் எதிலாவது அதிக ஆசை வைத்தால் அது எனக்குக் கிட்டுவதேயில்லை''

''தயவு செய்து நீங்கள் அப்படி விரக்தியோடு பேசக்கூடாது. முயன்றால் எதில்தான் வெற்றி பெற முடியாது? யார் கண்டது நீங்கள் அவளோடு பழகுகின்ற முறையைப் பொறுத்து அடுத்த சில நிமிடங்களில் சித்திரா உங்களோடுகூட ஒட்டிக் கொள்ளலாம்'' என்றாள் வசந்தி.

''அப்படியா? இதோ நான் நல்ல முறையில் முயன்று பார்க்கிறேன்'' என்றவன் சித்திராவைப் பார்த்துச் சொன்னான். ''பேபி நீ என்னோடு வீட்டுக்கே வந்துவிடு. அங்கு உன்னை மகாராணிபோல் வைத்திருப்பேன். நீ இட்டதே அங்கு சட்டம். நீ கீறிய கோட்டை அங்கு யாருமே தாண்டமாட்டார்கள். உனது கால்கள் நிலத்தில் படாத வாறு உன்னை கட்டிலிலும் தொட்டிலிலும் தோள்மீதுமாக .....''

வசந்தியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. வாய்விட்டே சிரி

த்து விட்டாள். ''இத்தனையும் போயும் போயும் ஒரு குழந்தைக் காகவா ?'' என்றாள்.

''அதுதான் நான் முன்பே சொல்லிவிட்டேனே, குழந்தை என்றால் எனக்குக் கொள்ளை ஆசை என்று!''

''உங்களுக்கு இன்னும் திரு மணம் ஆகவில்லையா?''

''ஆகியிருந்தால் குழந்தை யோடு எதற்காக விளையாடப் போகிறேன்?''

அவன் எந்தக் குழந்தை யைக் குறிப்பிடுகிறான்? அவள் சிந்தனையில் ஆழ்ந்தாள்.

சிவா அவளது சிந்தனையைக் கலைத்தான். சித்திராவை நோக்கி ''நான் போய்விடுகி றேன் பேபி. உனக்குத்தான் என்னைப் பிடிக்கவில்லையே!'' என்றான்.

''வேண்டாம். நில்லுங்கள்! உங்களைக் குழந்தைக்கு மிகவும் பிடித்துவிட்டது'' என்ற வச ந்தி குழந்தையை ஒரு குலுக்குக் குலுக்கிப் பரிவோடு அணைத்த வாறு ''எங்கே சித்திரா..... அப்படி அந்த மாமாவுக்குச் சொல்லுங்கோ... பார்ப்பம்'' என்றாள். குழந்தை பதிலுக்கு இலேசாகச் சிரித்தது.

அவன் மேலும் குழந்தை யிடம் நெருங்கி ''எங்கே அது உண்மையானால் எனக்கு ஒரு 'கிஸ்' தாங்கோ பார்க்க லாம்...'' என்றான்.

''ஐயய்யோ... அண்ணா பார்த்தால்....'' என மெது வாக குழைந்தவள் சித்திராவுக் குச் சொன்னாள். ''மாமாவை



''ஆண்ட பரம்பரை
மீண்டும் ஒருமுறை
ஆள நினைப்பதில்
என்ன குறை?''

என்ற அடிகள் கவிஞர் காசி ஆனந்தனுடையவை. 'தினத் தந்தி' ஆதித்தனார் தாம் பேசும் கூட்டங்களில் இந்த வரிகளை அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டு கூறுவார். ''இந்தக் கவிதை 'உறுமி' என்ற வாத்தியத்தின் ஓசைபோல உணர்ச்சிமய மானதாக இருக்கிறது'' என்று கூறி காசிஆனந்தனைப் பலமுறை பாராட்டியுள்ளார் அவர்.

— இணுவையூர் இரகு ஸ்ரீதரன்.

---

ஒருக்கால் கொஞ்சி விடுங்கோ கண்ணு... அச்சாப் பிள்ளை எல்லே... மாமா பாவம் எல்லே...''

'குழந்தை'க்கு கொஞ்சத் தெரியவில்லை; கெஞ்சத்தான் தெரிந்தது!

''கொஞ்ச வேண்டாம் பேபி என்னிடம் கொஞ்ச நேரம் மட் டும் வந்துவிடு. ஒரு நல்ல பரிசு தருகிறேன்.''

''என்ன பரிசோ...?''

''மன்னிக்க வேண்டும் உங் களுக்கு தருவதாக இல்லை.''

''எனக்கு வேண்டாம். ஆனல் அது என்ன பரிசு என்று அறியலாமா?''

''என்ன, எனக்குக் 'கிஸ்' கொடுக்கத்தான் 'குழந்தை'க்குப் பிடிக்கவில்லையாம். நானுவது அவளை ஆசைதீர...''

''ஆசையைப் பாருங்கள் ஆசையை!'' சொல்லிவிட்டு வசந்தி சிரித்தாள். ''அழைத்துத்தான் பாருங்களேன். பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது.''

''எங்கே பேபி கடைசிமுறையாகக் கேட்கிறேன். என்னிடம் ஒரே ஒரு தடவை மட்டும் வந்துவிடு...... என்ரை இராசாத்திக் குஞ்செல்லே.,.... கண்ணெல்லே....''—அவன் சித்திராவை மிகவும் நெருங்கினுன்.

சித்திரா முகத்தை வசந்தியின் கழுத்துக்குள் ஆழமாகப் புதைத்துக் கொண்டாள். கைகளாலும் கால்களாலும் அவளை இறுக அணைத்துக்கொண்டாள்.

அவன் கெஞ்சினுன், குழந்தை சிணுங்கியது. வசந்தியிடமிருந்து குழந்தையை விடுவிப்பதற்காக அவன் பெரு முயற்சி செய்துகொண்டிருந்தான். 'ஒரு குழந்தைக்கு இத்தனை வலிமையும் ஆற்றலுமா' என அவன் வியந்தான். வசந்திக்கு உடலெங்கும் சிலிர்த்தது. குழந்தையின் அழுகையைக்கூட பொருட்படுத்தாது ஏதோ ஒரு சுகத்தில் அவள் மிதந்தாள்.

வேறு யாராவது குழந்தையை அப்படி அழவைத்தார்களானுல் அவள் இந்நேரம் எரிமலையாகி இருப்பாள். இப்பொழுதோ அவள் தன்னை மறந்து அந்தப் பெரிய குழந்தையின் விளையாட்டில் மயங்கி நின்ருள். அப்பொழுது—

''குழந்தையோடு விளையாடியது போதும் ரீயைக் குடியெடா சிவா'' என்றவாறு தேநீர் தட்டுடன் சுந்தரம் வந்தான். சிவாவும் வசந்தியும் அதிர்ந்துபோய் பதட்டத்துடன் நின்ருர்கள். அவர்களது நெற்றிகளில் வியர்வை முத்துக்கள் அரும்பி நின்றன

சுந்தரம் தொடர்ந்தும் சொன்னுன் :- ''குழந்தை உனக்குத்தான்டா சிவா.....முதலில் ரீயைக் குடி. ம் குழந்தை நீயும் ஒன்றை எடு...''

இருவரும் நாணத்தால் தலை குனிந்தனர். அவர்கள் தமது கால்களைத் தாமே பார்த்து எதற்காகச் சிரிக்கிருர்கள்? O

---

ஜப்பானில் எங்காவது ஒரு இடத்திலிருந்து குறிப்பிட்ட இன்னெரு இடத்திற்கு போக வேண்டும். யாராவது ஒரு யப்பானியரைப் பார்த்து அந்த இடம் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று கேட்டுப் பாருங்கள். ஒரு மைல் என்ருே, இரண்டு மைல் என்ருே பதில் கிடைக்காது. அரை மணி நேரப் பயணம், ஒருமணி நேரப் பயணம் என்றுதான் பொதுவாகப் பதில் கிடைக்கும். ஆனுல், அந்த நேரம் நடந்து போவதற்கா, காரில் போவதற்கா என்று தெரியாமல் நீங்கள் திண்டாடிப் போவீர்கள்.

இன்றையஇளைஞர் சமுதாயத்தின் உளநோயாகப் பீடிக்கப்பட்டுள்ளவற்றில் விரக்தி மனப்பான்மை முதல் இடத்தை வகிக்கின்றது. விரக்தி மனப்பான்மை தமது ஆரோக்கியத்தையும்எதிர்கால வாழ்க்கை முன்னேற்றத்தையும் உறிஞ்சும் ஓர் மனநோய் என்பதைப் பலர் அறிவதில்லை. மனம் சோர்ந்து எதிர்கால வாழ்வில் அவநம்பிக்கை ஏற்பட்டுவிட்டால் அதைவிடக் கொடிய நஞ்சு வேறொன்றுமில்லை. இன்றைய இளைஞர் வருங்காலத்தில் தேக ஆரோக்கியத்துடன் வளமான வாழ்வு வாழ எண்ணுவார்களாயின், இவ் விரக்தி மனப்பான்மை அவர்களது உள்ளத்திலிருந்து அகலவேண்டும்.

## விரக்தி மனப்பான்மை ஏன் ஏற்படுகின்றது?

எமது இளைஞர் மத்தியில் விரக்தி மனப்பான்மை ஏற்படுவதற்கு தற்காலச் சூழ்நிலை ஓர் மேடையாக அமைகின்றது. எமது நாட்டினது பொருளாதார நிலை, பெருகிவரும் வேலையில்லாத்திண்டாட்டம் முதலியவை பெரும்பங்கு வகிக்கின்றன. இவ் இளைஞர்கள் மத்தியில், பெற்றோரும் மற்றோரும், தெரிந்தோ தெரியாமலோ இவ் விரக்தி மனப்பான்மையை வேரூன்றச் செய்கின்றனர். ''இனிமேல் படித்து என்ன பயன்'', உத்தியோகம் எங்கேகிடைக்கப் போகின்றது'', "நடுறோட்டிலே திரியவேண்டியதுதான்'', ''கழுதை நீ ஒன்றுககும் உதவாய்'', ''மாடு மாதிரி ஏன் படிக்கின்றாய்?, மாவட்ட ரீதியிலேயே சர்வகலாசாலைக்குத் தெரிவு நடக்கப்போகின்றது''

இவ்வாறுபெற்றோரும்மற்றோரும் இளைஞர்முன் கூறுவது எவ்வளவு மடமை? இவைபோன்ற அவநம்பிக்கை ஊட்டும் வாசகங்களே, அவர்கள் மத்தியில் விரக்தி மனப்பான்மையை வேரூன்றச் செய்கின்றன. இப்படியான வாசகங்கள் இளைஞர்களது ஒளிமயமான எதிர்காலத்தை மங்கச் செய்யும் என்பதை அறியாரோ?

## பெரியோரின் பணி

ஆகையினால், இளைஞர் மத்தியில் அவநம்பிக்கை ஊட்டும், விரக்தி மனப்பான்மையினை வளர்க்கக்கூடிய செயல்களையும், செய்கைகளையும் பெரியோர்களும், நண்பர்களும், உற்றாரும், உறவினர்களும் தவிர்த்தல் வேண்டும். கூடியவரை அவர்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும், நன்மை பயக்கும் கருத்துக்களைக்கூறி அவர்களை உற்சாகப்படுத்தல் வேண்டும். பெற்றோர் இவ் இளைஞர்களை அன்புவழியிலும், கௌரவமாகவும் பேணுதல் வேண்டும். அறிவுள்ள பெற்றோரின் நேரடிப் பாதுகாப்பிலும், பெரியோர் அறிவுரைகளினாலும் இவ் இளைஞர் பலரை இக்கொடிய உளநோயிலிருந்து மீட்கலாம்.

## விரட்டுவதெப்படி?


விரக்தி மனப்பான்மையினால் வாடும் ஓர் இளைஞர், பின்வரும் மூன்று வழிகளைக் கடைப்பிடித்தால் விரக்தி மனப்பான்மை

க. குகதாசன்

அகன்று வாழ்வும் வளவும் பெறலாம் என்று மனுேதத்துவ நிபுணர்கள் கருதுகின்றனர்.

## (1) உங்கள் மேல் நம்பிக்கை வையுங்கள்.

உலகில் எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் வேறுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர், எல்லோரிடத்திலும் ஓர் தனித்துவம் காணப்படுகின்றது. அத் தனித்துவத்தின் அருமையும் பெருமையும் எமக்குத் தெரிவதில்லை. ஆனுல் எமது கடின உழைப்பினுலும், முயற்சியினுலும் இத்தனித்துவத்தைத் தலை தூக்கச் செய்யலாம். உங்களில் நம்பிக்கைவைத்து 'எனது முன்னேற்றம் எனது கடின உழைப்பிலேயே தங்கியுள்ளது' என உணர்ந்து நன்ருகப் படித்தல் வேண்டும் அல்லது உழைத்தல் வேண்டும். 'நான் ஓர் பெரிய புள்ளி' என உங்களுக்குள்ளே கூறி, நீங்களே பெருமைப்படுங்கள். ''நானே நான்'' ''எனக்கு நிகர் நானே'', ''நான் எனது பெருமையையும், தனித்துவத்தையும் உலகறியச் செய்வேன்'' என்ற திடசங்கற்பத்துடன் செயற்படல்வேண்டும்.



சமீபத்தில் படப் பிடிப்புக்காக எம். ஜி. ஆர். காஷ்மீர் போனபோது, அவருடைய உபயோகத்துக்காக புதுடில்லியிலிருந்து 'ஏர்கண்டிசன்' செய்யப்பட்ட 'இம்பாலா' கார் கொண்டு செல்லப்பட்டது. அதன் டிரைவர் 'லால்' என்பவர், இப்போதுதான் முதன் முதலாக ஒரு இந்தியருக்கு அந்தக் காரை ஓட்டுவதாகச் சொன்னுர். இதற்குமுன் அந்த ஆடம்பரக்கார், வெளிநாட்டிலிருந்து வரும் கோடீஸ்வரர்களுக்கு மட்டுமே ஓடியிருக்கிறது. டிரைவர் லாலை எம். ஜி. ஆர். தம்மோடு சமமாக வைத்துப் பழகினுர். லாலுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. 'இவரைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனுல் இவ்வளவு அன்பும் பண்புமுள்ளவராயிருப்பாரென்று எதிர்பார்க்கவேயில்லை!' என்று பூரித்துப் போனுர் லால்.

## (2) அவநம்பிக்கைக் கருத்துக்களைக் கேட்கவேண்டாம். அவநம்பிக்கைக் கருத்துக்களைப் பேசவேண்டாம்.

உங்கள் முன் சிலர் ''கல்வி கற்று என்ன பயன்? உத்தியோகம் கிடைக்காதே; மாடு மேய்க்கக்கூட உனக்குத் தகுதி இல்லை'' இப்படி யாராவது உங்கள் முன் கூறினுல் அவர்கள் முன் நிற்கவேண்டாம். அவர் ஓர் தாழ்வு மனப்பான்மை கொண்ட (Inferiority complex) மனிதன் எனக் கணித்துக்கொண்டு அவரைத் தவிர்த்துக் கொள்ளுதல் நன்று. அத்துடன் நில்லாது நீங்

களும் இப்படியான அவநம்பிக்கை – எதிர்மறை எண்ணங்களை (Negative Thoughts) மற்ருேர்க்கும் கூறுதல் கூடாது. மற்றையோருடைய திறமையை அறிந்து அவர்களை ஒரு துறையில் ஊக்குவித்தல் வேண்டும். ஏனெனில் பிறரை ஊக்குவிப்பதன் மூலம் தான் எப்பொழுதும் ஊக்கமுடையவராக விளங்கமுடியும்.

## (3) சிறந்த சுயசரித நூல்களை வாசிக்கவும்.


"வாசிப்பது, மனிதனை முழு மனிதன் ஆக்குகின்றது'' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். நீங்கள் பல சிறந்த அறிவாளிகளின் சுயசரிதைகளை வாசிப்பதன் மூலம், மனத்தைரியத்தையும், எதையும் தாங்கும் இதயத்தையும், வெற்றிமனப்பான்மையையும் பெறமுடியும். ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, நேரு முதலியோரின் சுயசரித நூல்களை வாசித்தே தமது வாழ்வை மேம்படுத்தியோர் பலருண்டு.

## முடிவாக . . .

மேற்கூறிய மூன்றுவழிகளையும் கடைப்பிடித்துவந்தால் நாளடைவில், விரக்திமனப்பான்மையினை அகற்றி, வீறுமனப்பான்மை பெறலாம் என்பது மனோதத்துவ நிபுணர்களின் முடிபு. மனித வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வருவது இயல்பே. அதைப்போலவே ஒரு நாட்டினது பொருளாதாரமும். எமது நாடு, இன்னும் ஓர் பத்தோ அன்றேல் பதினைந்து ஆண்டுகளிலோ பல துறைகளில் முன்னேறக்கூடும். பல புதிய கனிவளங்கள் கண்டுபிடிக்கப்படக்கூடும்! எண்ணை வளம் கூடக் கண்டுபிடிக்கப்படலாம். இப்படியான நிலை ஏற்பட்டுவிட்டால் தொழில் வசதிகள் பன்மடங்காகப் பெருகிவிடலாம்! வேலை இல்லாத் திண்டாட்டம் என்ற நிலை நீங்கி, திறமைசாலிகளுக்கும் மூளைசாலிகளுக்கும் பஞ்சம் ஏற்படும் நிலையும் ஏற்படலாம். விஞ்ஞான விந்தைகளினுல் உலகம் முழுவதும் ஒன்ருகும்-குறுகும் நிலை ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. மேலை நாடுகளில் பெருகிவரும் விஞ்ஞான வளர்ச்சி, புதிய வளங்களையும், அப் புதிய வளங்கள் பல தொழிற்பெருக்கங்களையும் ஏற்படுத்திவருகின்றன. பிறநாடுகளில் ஏற்படும் இத் தொழிற்பெருக்கம், உங்களில் பல்லாயிரக்கணக்கோரை வரவழைக்கலாம்! இப்படியானவருங் காலத் தொழிற்பெருக்கத்திற்கு-திறமைசாலித்தனத்திற்கும், — மூளைசாலித்தனத்திற்கும் உங்களைத் தயார்படுத்திக்கொண்டிருக்கின்றீர்களா? ●

---

'மின்சார ரயில்கள் கொழும்பில் ஓடப் போகின்றன,' என்ற செய்தியைப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்திருக்கிருர். எப்போதோ செய்திருக்க வேண்டிய வேலை இது. பெருகிவரும் போக்குவரத்து நெருக்கடியைப் பார்த்தால், மின்சார ரயில் மட்டுமல்ல, பாதாள ரயில்களைக்கூட விடவேண்டுமென்று தோன்றுகிறது !



அமைச்சரவையில் சில மாற்றம் விரைவில் ஏற்படக்கூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. அப்போது அமைச்சர் குமாரசூரியரை வெளியே எங்காவது அனுப்பிவிடவும் கூடுமென சிலர் கருதுகிறார்கள். அப்படிச் செய்தால் அது தமிழ் மக்களுக்குப் பெரிய நஷ்டமாக இருக்குமென்பதை எவரும் மறுக்க முடியாது. இன்றுள்ள நிலையில் அமைச்சரவையில் தமிழ் மக்களுக்காக செய்யக்கூடிய நன்மைகளைத் துணிச்சலுடன் செய்யக்கூடியவர் குமாரசூரியர் ஒருவர்தான்!

அடுத்த வருடம் தொடக்கம் பெப்ரவரி 4ந் திகதி இலங்கையில் பொது விடுமுறை தினமாக இருக்காது. அதற்குப் பதிலாக மே 22ம் திகதிதான் விடுமுறை நாளாக இருக்கும். அன்றுதான் இலங்கை குடியரசான தினம்! இலங்கை சுதந்திரம் பெற்றிருந்தபோதும் பெயருக்கேனும் பிரிட்டிஷ் ராணிக்குக் கட்டுப்பட்ட நாடாகவே இருந்து வந்தது. மே 22ல் குடியரசான பிறகுதான் பூரணமான சுதந்திரநாடாகியிருக்கிறது! அதனால்தான் பெப்ரவரி 4 ஐ விட்டுவிட்டு மே 22ஐ கொண்டாட்ட தினமாக மாற்றியிருக்கிறார்கள்.

ஒரு பிள்ளையின் தாயொருத்தி தனது கணவன் 14 வயது இளம்பெண் ஒருத்தியுடன் காதல் தொடர்பு கொண்டதை அறிந்தாள். கத்தியை எடுத்து கணவனையும் அவனுடைய காதலியையும் பலமுறை குத்திவிட்டாள் அந்தப் பெண். இந்தச் சம்பவம் கடந்த மாதம் தென்னிலங்கையில் நடந்தது. — எல்லா விதத்திலும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் நடந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்!

தமிழ்ப் படங்களில் இப்போதெல்லாம் 'கவர்ச்சி' அதிகரித்து விட்டதென்று ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. தெலுங்கு ஹிந்திப் படங்களோடு பார்க்கையில் தமிழ்ப் படங்கள் இன்னும் அளவோடுதான் இருக்கின்றன. சினிமாவினால் மக்களிடையே கவர்ச்சி மனோபாவம் ஏற்படுகிறதென்று சொல்வதை விட, மக்களுடைய அந்த மனோபாவந்தான் சினிமாவில் பிரதிபலிக்கிறது என்று சொல்வதே பொருத்தமானது!

செயற்கை கிரகமொன்றை இந்தியாவும் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இதைத் தயாரித்து முடிக்க சுமார் இரண்டு வருடங்கள் ஆகலாம். செயற்கைக் கிரகத்தை தயாரித்த போதிலும், அதைவிண்வெளிக்கு அனுப்பக்கூடிய சாதனங்கள் இந்தியாவில் இல்லை. ஆகவே, கிரகம் தயாரானதும் அதை ரஷ்யாவுக்கு எடுத்துச் சென்று அங்கிருந்து விண்வெளிக்கு அனுப்பப் போகிறார்கள்!

புதிய நூல்

# இலக்கியமும் திறனாய்வும்

**கலாநிதி க. கைலாசபதி**

ஆசிரியர்களுக்கும், ஆசிரியகலாசாலை மாணவர்களுக்கும், இலக்கிய நோக்குடைய பிறருக்கும் மிகவும் பயன்தரும் நூல்.

**ரூபா 3-80** (தபாற் செலவு சதம் 60)

வரதர் வெளியீடு 226, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

---

ஆங்கிலம் பயிலும்
மாணவர்களுக்கு
ஒரு நல்ல துணைவன்

வரதர்
## மாணவர் அகராதி
(ஆங்கில - ஆங்கில - தமிழ்)

VARATHARS'
## STUDENTS DICTIONARY
[Eng.-Eng.-Tamil]


**ரூபா 5-00**

(தபாற் செலவு சதம் 60)

வரதர் வெளியீடு,
யாழ்ப்பாணம்.

---

**எல்லோரும் விரும்பி வாங்குகிறார்கள்!**




தான்

## எவர்பிறைற் சோப்

புதிய முறையில்
நல்ல தரத்தில் தயாராகின்றது

**பிறேமா தொழிற்சாலை**
பருத்தித்துறை.




அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி.ச வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.